செய்தி வெளியீடு எண் :47 நாள் :29.06.2019

**தேனி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலுகின்ற மாணவ, மாணவியர்களுக்கான புதிய வழித்தடத்திற்கான பேருந்துதினை கொடியசைத்து துவக்கி வைத்தார்:-**

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குபட்பட்ட வீரபாண்டி பேரூராட்சியில் உயர் கல்வித்துறையின் சார்பில் செயல்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலுகின்ற மாணவ, மாணவியர்கள் கல்லூரிக்கு எளிதில் சென்று வருவதற்கான புதிய வழித்தடத்திற்கான பேருந்தினை தேனி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (29.06.2019)கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் தமிழக அரசு கல்வி வளர்ச்சியின் மூலமே மக்களின் வாழ்க்கைதரம் ஏற்றும் பெறும் என்பதனையும், சமூக பொருளாதார வேறுபாடுகள் களையப்படும் என்பதனையும் கருத்தில் கொண்டு பள்ளி கல்வி மற்றும் உயர் கல்விற்கு முக்கியத்துவம் அளித்து எண்ணற்ற திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் உத்தரவின்படி, நமது மாவட்டத்தில் உயர்கல்வித்துறையின் சார்பில் தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி ஏற்படுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் சட்டமன்றப்பேரவை விதி எண் 110-ன் கீழ் தேனி மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில், வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் பயிலுகின்ற மாணவ, மாணவியர்கள் கல்லூரிக்கு எளிதில் சென்று வர ஏதுவாக தேனி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையித்திலிருந்து வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி, தப்புக்குண்டு, வெங்கடாசலபுரம், ஜங்கால்பட்டி, குப்பிநாயக்கன்பட்டி, அண்ணாநகர், கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை வரை புதிய வழித்தடத்தின் மூலம் பேருந்து இயக்கப்பட உள்ளது.

இந்நிகழ்வின் போது, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், வட்டார போக்குவரத்து அலுவலர் தர்மானந்தம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக மதுரை மண்டல நிர்வாக இயக்குநர் முருகேசன், திண்டுக்கல் கோட்ட பொது மேலாளர் ராஜேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.எம்.சையதுகான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன், கோட்ட மேலாளர் சி.பாண்டியராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**